# மூத்த ஓட்டுநர் புதுப்பித்தல் திட்டத்தின் மாற்றங்கள்

ஒண்டாரியோவின் மூத்த ஓட்டுநர் திட்டமானது, வயதானவர்கள் பாதுகாப்பாக வாகனம் ஓட்டும்வரை அவர்களை பணியில் வைத்துக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஓட்டுநர்களுக்கு 80 வயதாகும்போது, ஒவ்வொரு இரண்டு வருடத்துக்கும் அவர்கள்:

1. பார்வை சோதனை செய்து கொள்ளவேண்டும்
2. ஓட்டுநர் பதிவேடு மதிப்பாய்வுக்கு உட்படவேண்டும்
3. குழுக்கல்வி அமர்வில் பங்கேற்கவேண்டும்
4. அறிவுத்திறன் தேர்வில் பங்கேற்கவேண்டும்
5. தேவையெனில், ஒரு சாலைப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.

இந்த செயல்முறையை முடிப்பதற்கு தோராயமாக மூன்றரை மணிநேரமாகும். மூத்த ஓட்டுநர்கள் தங்களுடைய உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்வதற்கான செலவு ஐந்தாண்டு புதுப்பித்தலுக்கான செலவில் ஐந்தில் இரண்டு பங்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த நடைமுறைக்காக மேலே குறிப்பிட்டுள்ளதைத் தவிர வேறெந்தக் கூடுதல் செலவும் இல்லை.

சாலைப் போக்குவரத்தை மேம்படுவதற்காகக் கிடைக்கும் நவீன கருவிகள் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கும், இனிமேலும் வாகனத்தைப் பாதுகாப்பாக ஓட்ட முடியாத மூத்த ஓட்டுநர்களை திறமையாக அடையாளம் காண்பதற்கும் போக்குவரத்து அமைச்சகம் (MTO) இந்த திட்டத்தை மதிப்பாய்வு செய்து வருகின்றது.

இந்த உறுதிப்பாட்டை மேற்கொள்வதற்கு சிறப்பான, குறைந்த மனஅழுத்தம் கொண்ட ஒருவழி இருப்பதை நம்முடைய மதிப்பாய்வு காண்பித்துள்ளது. ஏப்ரல் 21, 2014-இல் தொடங்கி, தங்களுடைய உரிமத்தைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பும் மூத்த ஓட்டுநர்கள் இவற்றை மேற்கொள்வார்கள்:

1. பார்வை சோதனை செய்து கொள்வார்கள்
2. ஓட்டுநர் பதிவேட்டு மதிப்பாய்வுக்கு உட்படுவார்கள்
3. சிறு குழுக்கல்வி அமர்வில் பங்கேற்பார்கள்
4. இரண்டு, சுருக்கமான, கணினி-செயல்படுத்தப்படாத வகுப்பறை தணிக்கை சோதனை மதிப்பீடுகளை முடிப்பார்கள்
5. தேவையெனில், ஒரு சாலைப் பரிசோதனை மேற்கொள்வார்கள்.

இந்த செயல்முறை சுமார் 90 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளும். அறிவுத்திறன் தேர்வுக்காக மூத்த ஓட்டுநர்கள் படிக்கத் தேவையில்லை.

இந்த புதிய செயல்முறை ஒரு புதுப்பித்தல் திட்டமாகவே இருக்கும் என்பதை தயவுசெய்து கவனிக்கவும். நடப்பிலுள்ள மற்றும் செல்லத்தக்க உரிமங்கள் திரும்பப் பெறப்பட மாட்டாது, ஆனால் அனைத்துத் தேவைகளும் உங்களுடைய உரிமம் புதுப்பிக்கப்படுவதற்கு முன்பு பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

புதிய திட்டம் குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவுசெய்து Ontario.ca/seniordriver ஐப் பார்வையிடவும் அல்லது1-800-396-4233 அல்லது GTA: 416-235-3579ஐ அழைக்கவும்.

ஜனவரி 2014